**HMOP .No. 31/2019**

**Date : 13.10.2022**

***ம.சா.1 வெள்ளத்துரை***

***எ.ம.கு.வி தொடர்ச்சி***

எதிர்மனுதாரின் தாயாருக்கு நான் குடியிருக்கும் ஊர் தான் சொந்த ஊர் என்றால் சரிதான். பொதுவாக இந்து சமய நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் ஆடி, புரட்டாசி, மாசி,, மார்கழி ஆகிய மாதங்களில் நடத்தப்படுவது கிடையாது என்றால் சரிதான். ஆனால் எனக்கும் எதிர்மனுதாருக்கும் மாசி மாதம் திருமணம் நடைபெற்றதாக மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாருக்கும் சங்கரன்கோவிலில் உள்ள சங்கரநாரயணசுவாமி பெரியகோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. எதிர்மனுதாரின் எதிர்உரையில் எங்களது திருமணம் வைகாசி மாதம் நடைபெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். பொது வாக இந்து சமய திருமணங்கள் அதிக அளவில் வைகாசி மாதம் நடைபெறும் என்றால் சரிதான். திருமணம்ததிற்கு பின்னர் நானும் எதிர்மனுதாரும் இரண்டு மாதங்கள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்தோம். எதிர்மனுதாரிடம் நான் வரதட்சணை கேட்டதால் டிசம்பர் 2017ல் எதிர்மனுதார் அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. மே 2015ல் லே எதிர்மனுதார் என்னை விட்டு சென்றுவிட்டார். எதிர்மனுதார் என்னை விட்டு சென்ற பின்னர் சமரசம் ஏற்பட்டு எதிர்மனுதார் என்னுடன் எனது வீட்டில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. மார்ச் 2017ல் எனது தகப்பனார் இறந்த சமயம் எதிர்மனுதார் என்னுடைய வீட்டில் வந்து ஒரு மாதம் ஒன்றாக குடியிருந்தார். எதிர்மனுதார் எனது தகப்பனார் இறந்த சமயம் என்னுடன் வந்து ஒன்றாக குடியிருந்தது எங்களுக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் சரிதான். எதிர்மனுதார் என்னுடன் மார்ச் 2017ல் சேர்ந்து வாழ்ந்த போது நான் வரதட்சணை கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டு எதிர்மனுதார் சேர்ந்து வாழ வைக்க கோரி சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில்புகார் அளித்தார் என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டு தான் அவ்வாறு எதிர்மனுதார் புகார் அளித்தார். எதிர்மனுதார் அளித்த புகாரின் பேரில் சி.எஸ்.ஆர் எண். 476/18ன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணையில் தூத்துக்குடியில் தனியாக வீடு பிடித்து 1 மாத்தில்

எதிர்மனுதாரை அழைத்து செல்வதாக எழுத்து மூல வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். அதன் பேரில் எதிர்மனுதாரை அழைத்து சென்று வாழ வில்லை என்றால் அதற்குள் எதிர்மனுதார் போலிசார் மூலம் எனது தாயாரை விசாரணைக்கு அழைத்துவந்துவிட்டனர். எனது தாயாரின் துர்போதனையின் பேரில் தான் எதிர்மனுதாருடன் வாழ மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் சேர்ந்து வாழ புகார் அளித்த பின்னர் தான் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதார் தற்போது என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் நான் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ தயராக இல்லை. நான் தான் எதிர்மனுதாருடன் தாம்பத்ய உறவில் ஈடுபடாமல் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ காரணமின்றி மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாருடன் தாம்பத்ய உறவில் ஈடுபடாததால் தான் எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ அழைத்து செல்ல தயாராக இல்லை. எதிர்மனுதார் தான் தாம்பத்ய உறவிற்கு மறுத்ததாக பொய்யாக மனுவில் குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டு வரை நானும் எதிர்மனுதாரும் அவ்வப்போது சேர்ந்து வாழ்ந்தோம் என்றாலும், மனுவிற்காக 3 ½ ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருவதாக பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாருக்கும் 24.05.2015 அன்று தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த திருமண பத்திரிக்கை வழக்கிற்காக பின்னிட்டு அச்சடித்து உற்பத்தி செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**